1979 மார்ச் 5]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெருக்கடி கால நேரத்தின்போதும் அதற்கு முன்னாலும் கூட கட்டாயமாக வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படுவார்களா ? அவர்களுக்கும் அத்தகைய சலுகைகள் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, அளிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் சொல்லும்போது, விதிகளுக்கு உட்பட்டுத்தான் அவர்களுக்கு அனுமதி வழங்குகிறோம் என்றுசொன்னார். ஆனால், தமிழகத்திலே உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தவர்கள் எல்லாம் தனியாரிடம் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன், நகரசபை மற்றும் அரசின் உயர்ந்த அதிகாரங்களில் இருந்தவர்களெல்லாம் வேலை செய்கிறார்கள். தமிழகத்தில் உள்ள நிர்வாக சீர்கேட்டுக்கு இவர்கள்தான் காரணம் என்ற உணர்வு தமிழகத்திலே வளர்ந்திருப்பதால் இதைத் தடை செய்ய மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அந்த உணர்வுகள் இருந்த காரணத்தால் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, 1977-ல் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மின்வாரியத்தில் பட்டதாரி இளநிலை உதவியாளர் சம்பள விகிதம்

*வினா எண் 219—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளில் மின்வாரியத்தில் பணியில் இருந்த பட்டதாரி இளநிலை உதவியாளர்களின் சம்பள விகிதம் பொருத்தும் விஷயமாக மதுரை, தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பின் மீது மின்வாரியம் தாக்கல் செய்த ரிட் மனுவை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்த பின்னும் மின்வாரியத்தால் பொதுவான உத்தரவுகள் பிறப்பிக்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் தேதியில் பட்டதாரி இளநிலை உதவியாளர்களுக்கு சாதகமான ஆணைகள் தமிழ்நாடு மின்வாரியத்தால பிறப்பிக்கப்பட்டு விட்டன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, மின்சார அமைச்சர் பதில் சொல்லும்போது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். அந்த ஆணை அடிப்படையிலே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகை என்ன என்று அமைச்சர் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் அன்று ரூபாய் 150 என்ற அடிப்படை சம்பள விகிதம் பொருத்தப்பட்டு அதற்கு மேலான ஆண்டுகள் கணக்கிடப்பட்டு கூடுதலான ஊதியம் வழங்கப்படும். இதுதான் அந்த ஆணையின் சாராம்சம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, மின் வாரியத்தின்கீழ் படித்து பட்டம் பெற்றிருக்கக்கூடிய பலர் காஷுவல் லேபர் மாதிரி இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அவர் பிறப்பித்த உத்தரவின்படி அப்படிப் பட்ட காஷுவல் லேபர் முறையிலே, ரூ. 2¾, ரூ. 3¼ என்று கூலி கொடுத்து வேலை வாங்குவது அடியோடு தடுக்கப் பட்டு, அவர்கள் எல்லோரும் பதிவு செய்யப்பட்டு வேலையிலே அமர்த்தப்படுவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எனக்குத் தகவல் இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அரசு அதைப்பற்றி ஆராயும்.

பணகுடி துணை மின் நிலையம்.

*வினா எண் 220—திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடியிலுள்ள 66 K.V திறனுள்ள துணை மின் நிலையத்தை 133 K.V திறனுடையதாக மாற்றி அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது முதல் செயல்படும்?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன்: (அ) பணகுடியிலுள்ள துணை மின் நிலையத்தை 66 கிலோ வாட்டிலிருந்து 110 கிலோ வாட் திறனுள்ளதாக மாற்றி அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.